விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 078 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 23 வெள்ளிக்கிழமை (07.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சிறுபோகத்துக்கு உரத்தை தட்டுப்பாடின்றி வழங்குக



### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபோகத்தின்போது பயிர்ச்செய்கைகளுக்குத் தேவையான உரத்தைத் தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

சிறுபோகத்துக்கு 15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.மாவட்டத்தில்
## அதிகரித்துவரும் வெள்ளை ஈ தாக்கம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வரும் தென்னை மரங்களின் மீதான வெள்ளை ஈயின் தாக்கம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற விவசாயக்குழு

16ஆம் பக்கம் பார்க்க

# யுத்தத்தில் மருத்துவமனைகள் மீது விமானத் தாக்குதல் இடம்பெற்றது

### அல் ஜசீராவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் பேட்டி



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத் தின்போது மருத்துவமனை கள்மீது விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றது.

மேலும் யுத்தத்தில் சிக்குண்ட மக்களின் மனிதாபிமான உதவி களும் தடுக்கப்பட்டன என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## தருமபுரத்தில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(தருமபுரம்)

தருமபுரம் கல்லாறுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை சித்திர

15ஆம் பக்கம் பார்க்க

## 160 சிகரெட் பெட்டிகளுடன்
### அச்சுவேலியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் இருந்து கடத்திவரப்பட்ட 160 சிகரெட் பெட்டிகளுடன் அச்சுவேலியில் இளைஞன் ஒருவர் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விவகாரம் தொடர்பில் தீர்மானிக்க அவகாசம் தேவை

### புத்தசாசன அமைச்சர் ஹினிதும சுனில்



(கொழும்பு)

தையிட்டி விகாரை தொடர்பான தீர்மானங்களை மேற் கொள்ள அரசாங்கத்துக்குக் கால அவகாசம் தேவை எனப் புத்தசாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் யாழ்.தையிட்டி விகாரை சட்டவிரோத

15ஆம் பக்கம் பார்க்க

### மல்லாவியில்
## குரங்கைத் தூக்கில் ஏற்றிப் படுகொலை

(மல்லாவி)



மல்லாவியில் குரங்கு ஒன்றினைத் தூக்கில் ஏற்றிப் படுகொலை செய்த கொடூரச் சம்பவம் ஒன்று

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் காற்று மாசு; குறைக்க விசேட திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழில் காற்று மாசுபாட்டைக் குறைக்க விசேட திட்டம் ஒன்றுமுன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகரித்துவரும் காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கான ஒரு திட்டத்தை வகுக்க சுற்றாடல் அமைச்சர் மற்றும் பிரதிவாதிகளுக்கு உத்தர விடக்கோரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் உமா சுகி நடராஜாவினால் தாக்கல் செய்த மனு நேற்று நீதி

15ஆம் பக்கம் பார்க்க

## வழமைக்கு திரும்பிய சிவகங்கை கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சிவகங்கை கப்பல் சேவையானது வழமைக்கு

15ஆம் பக்கம் பார்க்க

### கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பில்
## கல்வி அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

(கொழும்பு)

புதிய கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பில் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கோணேஸ்வரன் (சந்திரன்)

(ஓய்வுபெற்ற கைதடி முதியோர் இல்லப் பணியாளர்)



கைதடி கிழக்கைப் பிறப்பிட மாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கோணேஸ்வரன் நேற்று (06.03.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற அஞ்சல் அலுவலர்) - கமலாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா - அழகம்மா தம்பதியரின் மருமகனும் சத்தியலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் லக்சனா (பிரதேச செயலகம் - கோப்பாய்) அவர்களின் அன்புத் தந்தையும் ரமணனின் (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) அன்பு மாமனாரும் விருத்ராமின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரன் (தபால் அலுவலர் - கைதடி), கோடீஸ்வரன் (தபால் அலுவலர் - கைதடி), ரிஷிகேஸ்வரன் மற்றும் ரதீஸ்வரன் (லண்டன்), விஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனலோஜினி (ஓய்வுபெற்ற தாதியர் - கைதடி முதியோர் இல்லம்), அருந்தவதேவி, இதயனி (லண்டன்), சோபனா (லண்டன்), தவராஜசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற மயில்வாகனம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அவர்களின் பெறாமகனும் வசந்தமாலா (கணக்காளர் - கிளி/பொலிஸ் நிலையம்), வசந்தசிவா, வசந்தன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் திசாந்தின் சிறிய தந்தையும் பிரஜித், அத்ஜித், சாருகா (லண்டன்), அஸ்வின், அக்நிஷா (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் அஜன் (ஜேர்மனி), ராம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, கனகசபாபதி மற்றும் அமிர்தலிங்கம் (ஓய்வு பெற்ற தபால் அலுவலர் - நீர்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் நீர்வேலி இந்து மயானம் சிவியாக கடவையில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-2402)

# தேஷபந்து தென்னகோன் தொடர்பில் தெரிந்தால் அறிவிக்குக

## மக்களின் உதவியை நாடிய பொலிஸார்

பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேஷபந்து தென்னகோனை கண்டுபிடிக்கும் பணி குற்றப் புலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் அவரைக் கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர் தொடர்புடைய தகவல்கள் தெரிந்தவர்கள் உடனடியாக சிஐடிக்கு தெரிவிக்குமாறு பொலிஸ் அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் முன்னாள் பொலிஸ்மா அதிபர் நாட்டை விட்டு தப்பிச் சென்றதற்கான எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிங்கள பாட ஆசிரியர்
திருமதி தயாபரி சுதாகரன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் சண்முகலிங்கம் அன்னலக்சுமி



தோற்றம் 25.07.1957 மறைவு 04.03.2025


அவர்களின் பிரிவால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்...
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.

(C-2399)

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 08 - 1934



இறப்பு 06 - 03 - 2025

## திருமதி சின்னத்தம்பி இலட்சுமி [மிரியம்]

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இலட்சுமி(மிரியம்) அவர்கள் நேற்று 06.03.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகர் - சின்னத்தங்கம் தம்பதியனரின் அன்பு மருமகளும் சிவபாலன்(ஜேர்மனி), சிவராஜா(கனடா), சிவவாணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேஸ்வரி(ஜேர்மனி), கேமலதா (கனடா), சதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிளமென்ரா, டெனிசன், கிறிஸ்ரீனா, லுக்காஸ், ஆரதி, தூயன், ஆரூசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெசினா, கேப்ரியல் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை ஞாயிறு (09.03.2025) பிற்பகல் 2.00 மணியளவில் ஊரெழு மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் (மல்வம்) அப்போஸ்தலர் சேமகக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :

1. சிவபாலன் (ஜேர்மன்) : +491782009512, 077 034 6559 (இலங்கை)
2. சிவராஜா (கனடா) : +16475277726, 076 117 2274 (இலங்கை)
3. சிவவாணி (சுவிஸ்) : +41783050415, 076 790 7965 (இலங்கை)
4. சதீஸ்வரன் (சுவிஸ்) : +41783146826

(3393)

# மரண அறிவித்தல்

## திருமதி தர்மபதி தர்மசிறீராஜா B.A

(ஓய்வு நிலை ஆசிரியை, பகுதித்தலைவர், யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி)



மலர்வு 13.08.1939 உதிர்வு 06.03.2025

வதிரி தர்மவாசாவைச் சேர்ந்த திருமதி தர்மபதி தர்மசிறீராஜா அவர்கள் நேற்று 06.03.2025 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் - வல்லிநாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குண்டுமணி - பறுவதம் தம்பதியினரின் அன்பு மருமகளும் தர்மசிறீராஜா (ஓய்வுநிலை சிரேஷ்ட போதனாசிரியர், தேசிய தொலைக்கல்வி நிலையம், ஓய்வு நிலை ஆசிரியர் - யா/ஹாட்லிக் கல்லூரி, யா/சென்ஜோன்ஸ் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் தர்மராணி துரைரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரியும் தர்மேந்திரா(ராஜன் - பொறியியலாளர் - லண்டன்), தர்மசுரேந்திரநாத் (சுரேன் - பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் டாக்டர். சிவாஜினி தர்மேந்திரா(லண்டன்), பாமினா தர்மசுரேந்திரநாத்(சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவதர்சன்(லண்டன்), ஹரேன்(லண்டன்), பவிக்சா(சிங்கப்பூர்), தஷ்வந்த்(சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 08.03.2025 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :

1. தர்மேந்திரா (ராஜன்) : +447825152591
2. தர்மசுரேந்திரநாத் (சுரேன்) : + 6594235760, +94756506799

(C-2401)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி இடம்பெறும் மோசடிகள்!

## எச்சரிக்கை விடுத்த இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

**சிறிய முதலீடுகளுக்கு கணிசமான நிதி வருமானத்தை வங்கி வழங்குவதாக பொய்யாகக் கூறும் மோசடி விளம்பரங்களுக்கு எதிராக இலங்கை மத்திய வங்கி கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளது.**

செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த ஏமாற்று விளம்பரங்கள், பொதுமக்களைத் தவறாக வழிநடத்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் படங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றன என்பதை இலங்கை மத்திய வங்கி எடுத்துக்காட்டியுள்ளது.

டிஜிற்றல் தளங்களில் தோன்றும் இந்தப் பொய்யான விளம்பரங்கள், இலங்கை மத்திய வங்கியானது ஒரு சிறிய தொகையை முதலீடு செய்யும் நபர்களுக்கு பெரிய தொகையை செலுத்து வதாக தவறாகக்கூறுகின்றன. எனவே, இது தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறு இலங்கை மத்திய வங்கி பொது மக்களை எச்சரித்துள்ளது. (நி-8)

# கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

நாட்டிற்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் பெண் உட்பட இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை யானது நேற்று விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபரான பெண் டுபாயிலிருந்து நேற்று நள்ளிரவு 12 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதுடன் மற்றைய இளைஞன் சார்ஜாவிலிருந்து நேற்று அதிகாலை 04 மணியளவில் விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்தநிலையில், சந்தேக நபர்கள் இருவரும் விமான நிலையத்தைவிட்டு வெளியேற முயன்ற போது விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் கொண்டு வந்த பயணப்பொதிகளிலிருந்து 58 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 39,200 வெளிநாட்டு சிகரெட்டுக்கள் அடங்கிய 196 சிகரெட்டு காட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-8)

# போக்குவரத்து அனுமதிப்பத்திரத்திற்கு புதிய நடைமுறை அறிமுகம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

தனியார் பேருந்துகளுக்கான வீதி அனுமதிப்பத்திரம் அந்த பேருந்துகளில் சி.சி.ரி.வி பாதுகாப்பு கமராக் கட்டமைப்பு பொருத்தப்பட்டு இருந்தால் மாத்திரமே வழங்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி.டி விதாரன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொதுப் போக்குவரத்தின் போது பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகளைத் தவிர்ப்பதற்காக நீண்ட கால வேலைத்திட்டம் ஒன்று அவசியம் என்றும், பொதுப் போக்குவரத்தை பெண்களுக்கான பொது இடமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். (நி-8)

# மின்சாரம் தாக்கி

## தாயும் மகனும் உயிரிழப்பு

(கொழும்பு)

சட்டவிரோத மின்சாரம் தாக்கியதில் தாயும் மகனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

சூரியவெவ, வீரியகம பகுதியில் வசிக்கும் ஒரு தாயும் அவரது ஐந்து வயது மகனும் நேற்று முன்தினம் மாலை அயல் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த அங்கீகரிக் கப்படாத மின்சாரக் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக சூரியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் அருகிலுள்ள வீட்டிற்கு சிறு குழந்தைகள் பயன்படுத்தும் மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தபோது சட்டவிரோத மின் கம்பியில் சிக்கிக் கொண்டதாகவும், மகனைக் காப்பாற்ற சம்பவ இடத்திற்கு ஓடிச் சென்ற தாயும் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து சூரியவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். (நி-8)

# சுகாதாரத்துறையின் வெற்றிடங்கள் இம்மாதம் நிரப்பப்படும்

(கொழும்பு)

எதிர்காலத்தில் சுகாதாரத் துறையில் வேலைவாய்ப்புகளுக்காக பல ஆட்சேர்ப்புகள் செய்யப்பட உள்ள தாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, இந்த மாத நடுப்பகுதிக்குள் 976 குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மார்ச் மாத நடுப்பகுதிக்குள் 238 பொதுச் சுகாதார ஆய்வாளர்கள், 65 மருந்தாளுநர்கள், 43 தொழில் சிகிச்சையாளர்கள் மற்றும் 41 கதிரியக்க வல்லுநர்கள் நியமிக்கப்படுவார்கள்.

ஏப்ரல் மாதத்தில் 3,147 செவிலியர் அதிகாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும்.

மே மாதத்திற்குள் 1,000 உதவியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## • வடக்கின் பேரர் • பொன் அணிகள் போர்

# துடுப்பாட்ட சமர்கள் ஆரம்பமானது



வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 118 ஆவது பெரும் துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் பந்து வீச்சை தீர்மானித்தது.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தனது முதல் இன்னிங்ஸினை சென்.ஜோன்ஸ் கல்லூரி விளையாடி வருகின்றது.

குறித்த போட்டி இன்று மற்றும் நாளை வரை இடம்பெறவுள்ளது. (6-8-33)





பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 108 ஆவது துடுப்பாட்ட போட்டி நேற்று சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வென்ற சென் பற்றிக்ஸ் முதலில் பந்து வீச்சினை தேர்வு செய்தது. இதற்கு அமைய தமது முதல் இன்னிங்ஸினை விளையாடி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 67 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸினை சென் பற்றிக்ஸ் துடுப்பெடுத்தாடி வருகிறது. குறித்த போட்டி இன்று மற்றும் நாளை வரை இடம்பெறவுள்ளது. (6-8-33)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3308

### பேர்னிகா


குழந்தை மைதானத்தில் விளையாடினால் ஆடை மட்டும் தான் மண்ணாகும்



குழந்தை மொபைலில் விளையாடினால் குழந்தையே மண்ணாகும்

### மெமோசா

நிலவுக்கு ரொக்கெட் அனுப்புவதை விட சிக்கலான வேலை ஒரு வயது குழந்தையை தூங்க வைக்கிறது



பல சமயங்களில் நம் திட்டம் படுதோல்வி ஆகி விடுகிறது

### றோகிதா

ஆண்பாலாக பிறந்ததற்குப் பதிலாக...




ஆவின் பாலாக பிறந்திருந்தால் மனைவிக்கு முன் தைரியமாக பொங்கி இருக்கலாம்

### ஆதீக்




### ஜொசிதா


கேட்பவை எல்லாம் கிடைத்து விட்டால் வாழ்க்கையில் ரசனை இருக்காது



கிடைப்பவை எல்லாம் நிலைத்துவிட்டால் கேட்பதற்கு எதுவும் இருக்காது!

### சபீசன்

கணவர்: ஏண்டி!! இந்த மீன் குழம்பை இன்னும் கொஞ்சம் தண்ணியா வைச்சிருக்கலாம் தானே!




மனைவி: செத்துப் போன மீன் இனி நீந்தவா போகுது? வைச்சதை பேசாமல் சாப்பிட்டு போங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். DR.வினோதரன்
(பாலசுந்தரம் அஜந்தன்)


எம் குலவிளக்கு அணைந்து 18 ஆண்டு ஆனதுவோ!
ஆறவில்லை எம் மனம்! எண்ணமெலாம் நிறைந்த,
எழிலுருவே! எம் நெஞ்சமெலாம் நிறைந்து நிற்கிறீர்!
எமக்கு உயிரும் உணர்வும் ஊட்டமும்
உயர் வாழ்வுமளித்த எழிலுருவே! ஏங்குகிறோம்
கண்ணீருடன்.....



(897)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
தாய்: பாலசுந்தரம்
அன்பு மனைவி: கருணாதேவி, ஆசை மகன்: அருளகன்
அன்புத் தங்கை: அகிலா அன்னலிங்கம் குடும்பத்தார்.

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் பாட
ஆசிரியை திருமதி.ஆன் அன்ரனி றெவல்
அவர்களின் அன்புத் தந்தை

## N.M.பாலச்சந்திரன்

அவர்கள் 04.03.2025 அன்று
இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். (சி-2392)

பிரிவால் துயருறும்
யாழ்.இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்.

பூநகரி வெட்டுக்காடு புனித பற்றிமா அன்னை ஆலய திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பூநகரி பங்குத்தந்தை அருட்பணி நிலான் ஜீலியஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திருவிழா திருப்பலியை கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி செபஜீவன் ஒப்புக்கொடுத்தார். (6-8)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

# NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் **31.01.2024** இற்கு முன்பு அடகுவைக்கப்பட்டு கீழ் குறிப்பிடப்படும் திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் **22.03.2025** தொடக்கம் **30.03.2025** வரையான காலப் பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 20.03.2025 | 22.03.2025 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 02. | முல்லைத்தீவு, மல்லாவி | 20.03.2025 | 22.03.2025 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 03. | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் | 20.03.2025 | 23.03.2025 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 04. | வவுனியா | 20.03.2025 | 23.03.2025 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 05. | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை | 27.03.2025 | 29.03.2025 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 06. | மன்னார், வங்காலை | 27.03.2025 | 29.03.2025 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 07. | யாழ்ப்பாணம்,யாழ்ப்பாணம் II ஆம் கிளை ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கோப்பாய் | 27.03.2025 | 30.03.2025 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு. (3588)

**வடபிராந்திய காரியாலயம், தேசிய சேமிப்பு வங்கி.**

# பெயர் மாற்ற அறிவித்தல்

மந்திராளி இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி முகவரியை சேர்ந்த NIC-No-194536102406 கொண்ட கணபதி முருகேசன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை கணபதி முருகையா என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணாங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

**உண்மையுள்ள கணபதி முருகையா** (சி-2396)

# இராசிபலன்

07.03.2025
மாசி 23, வெள்ளிக்கிழமை
அட்டமி பிற்பகல் 2.09 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 3.42 மணிவரை
சுபநேரம் 6.25-7.55 மணிவரை
இராகுகாலம் 10.55-12.25 மணிவரை

சந்திராஷ்டமம்
விசாகம்.

**வளவன்**

**மேஷம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு, வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** எந்தவொரு வேலையையும் நாளையெனத் தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்டு வரலாம்.

**கடகம்** உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** உற்சாகத்துடன் செயற்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள், முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பிறர் உதவியுண்டு, தொட்ட காரியங்கள் துளிர்விடும் நாள்.

**கன்னி** வழிபாட்டில் ஆர்வம் கூடும், பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், மறைமுகப் போட்டிகள் மாறும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகளால் பெருமையுண்டு.


**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மீனம்** இல்லத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர்.

**மற்றவர்களுக்கு நீ கொடுக்க விரும்பாததை மற்றவர்களிடமிருந்து நீ கேட்கக்கூடாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுவலுவுடையோருக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கி வைப்பு




(யாழ்ப்பாணம்)

மாற்றுவலுவுடையோருக் கான சாரதி அனுமதிப்பத்திரம் நேற்று யாழ்.மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத் தில் வைத்து வழங்கி வைக் கப்பட்டது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கைதடி மாகாண சபைக் கட்ட டத்தொகுதியில் நடத் தப்பட்ட நடமாடும் சேவையின் போது மாற்று வலுவுள்ளோரி னால், மோட்டார் போக் குவரத்து திணைக்கள ஆணையாளர் நாய கத்திற்கு முன்வைக் கப்பட்ட கோரிக்கை யின் அடிப்படையில் உள்ளூரில் வடிவ மைக்கப்பட்ட மோட்டார் வண்டிகளை திணை க்களத்தின் தொழில் நுட்பப் பிரிவினரால் பரிசீலிக் கப்பட்டு அந்த வாகனங்களுக் குரிய அடிச்சட்ட இலக்கங்கள் பொறிக்கப்பட்டன.

அதன் பின்னர் குறித்த வாகனங்களிற்கு 325-6000 என்ற தொடர் இலக்கங்கள் ஒதுக்கப்பட்டு குறித்த வாக னங்கள் பதிவு செய்யப்பட்டு பதிவுச் சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டது.

அதன் தொடர்ச்சியாக மாற்று வலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக எழுத்துப் பரீட்சை மற்றும் செயன் முறைப் பரீட்சைகள் என்பன நடத்தப்பட்டு அவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் மோட்டார் போக்குவரத்து திணைக் களத் தினால் வழங்கி வைக்கப்பட்டுள் ளது.

இவ்வாறு மாற்றுவலு வுள்ளோர் பயன்படுத்தும் உள் ளூரில் வடிவமைக்கப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்து அவர்களுக்கான சாரதி அனு மதிப்பத்திரம் வழங்கி வைப்பு யாழ். மாவட்டத்திலேயே முதன் முதலாக நடைபெறு கின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிர தீபன் உள்ளிட்ட அரச அதிகா ரிகள் மற்றும் மாற்றுவலு வுடையோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-8)

# திருமறைக்கலாமன்றத்தின் மகளிர் தினம் இளவாலையில் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்,இளவாலை திருமறைக் கலாமன்றங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மகளிர் தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இளவாலை திரு மறைக் கலாமன்ற கலைத்தூது கலைக் களரியில் நடைபெற வுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக தேசிய கல்வி நிறு வகத்தின் தமிழ்த்துறை ஓய் வுநிலை விரிவுரையாளரும், எழுத்தாளருமான திருமதி ராணி சீதரன், சிறப்பு விருந் தினராக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்த் துறை பிரதிக் கல்விப் பணிப் பாளர் திருமதி கவிதா சந்திர குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது நடனங்கள், பாடல்கள், கவிதை போன்ற வற்றுடன் சிறப்பு நிகழ்வாக யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் "செம்பாத்தாள்" கூத்துருவ நாடகமும் இடம் பெறவுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிரதேசத்தில் தென்னமரவடி பிராந்தியத் திற்கு தலைமை வகித்த மரிய செம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளில் இருந்து உரு வாக்கப்பட்ட படைப்பாக "செம் பாத்தாள்" அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பாதுகாபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீபுருஷோத்தம பகவா னுடைய ஜென்மதின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு மகேஸ்வரன் மணி மண்டபத்தில் (நல்லூர் கோவிலின் வடக்கு பிரகாரம்) இடம்பெறவுள்ளது.

விசேட பாதுகாபிஷேகம் இடம் பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து ஸ்ரீமான் கல்கி பகவானின் ஜனனதினக் கொண்டாட்டமும் நடைபெறவுள் ளது. (6-8)

# மகளிர் தினத்தை முன்னிட்டு மாவட்ட வலைப்பந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மகளிர் தினத்தை முன் னிட்டு யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் யாழ் மாவட்ட பாடசாலை களுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட பெண் களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக் கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழ மைகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இதற்கான போட்டி அட்ட வணை தயாரிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற் பகல் 3.30 மணிக்கு யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாட சாலையில் நடைபெறவுள் ளது.

பங்கு பற்றவிருக்கும் பாட சாலையின் பொறுப்பாசிரியர் கள் தவறாது கலந்து கொள் ளுமாறு யாழ் மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத் தலைவர் செல்வி மனோன்மணி அறி வித்துள்ளார். (6-8-90)

# யோகக்கலை கற்கை ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத் தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப் படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை சனிக் கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணி வரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வ முள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலா ரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற் கைநெறியை பூரணமாக முடிப்பவர்க ளுக்கு கல்வி அமைச்சினால் அங்கீக ரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்பட விருக்கின்றன.

பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்க ளுக்கு 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடிய மெனவும் கல்வி அமைச்சின் செய லாளர் அறிவித்துள்ளார். (6-8)



திருவண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 100 | 100-130 | 100 |
| உருளைக்கிழங்கு | 180 | 170 | 180 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 500 | 550-700 | 600 |
| தக்காளி | 100 | 140 | 100 | 80-100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 200 | 150-200 | 200 |
| கோவா | 300 | 300 | 400 | 250 | 400 |
| கரட் | 850 | 800-900 | 1000 | 680 | 900 |
| பூசணி | 120 | 150 | 150 | 80 | 150 |
| புடோல் | 150 | 120 | 150 | 100-120 | 200 |
| வாழைக்காய் | 160 | 100 | 120 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 150-280 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 140 | 200 |
| பாகற்காய் | 350 | 300 | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 300 | 300 | 200 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 300 | 200-250 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 150 | 200 | 150 | 120 | 240 |
| கறிமிளகாய் | 800 | 700 | 400 | 600 | 600 |
| முருங்கைக்காய் | - | 2500 | 1500 | 2000 | -- |
| போஞ்சி | 100 | 150 | 300 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 150 | 80-100 | 80 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 150 | 200 | 100 | 200-250 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 200 | 150-250 | 220-260 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 150 | 50-80 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 85 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 50 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்புக்கள் இலங்கையில் அதிகரிப்பு!

## வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் தவறான முடிவெடுத்து உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இலங்கை உளவியல் மருத்துவ விஞ்ஞான சங்கத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

சுயநினைவற்ற முடிவுகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக மக்களுக்குள் தவறான முடிவுகளை எடுக்கும் எண்ணங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது குறிப்பாக 15 முதல் 19 வயதுக்குள் உள்ள இளைஞர்களை அதிகமாக பாதிக்கிறது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தவறான முடிவுகள் தொடர்பில் பொறுப்புடன் செய்தி அறிக்கையிடல் என்ற தொனிப் பொருளில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் செயலமர்வில் உரையாற்றிய அவர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

உலகளவில் ஆண்டுக்கு 7 இலட்சம் பேர் தவறான முடிவுகளால் உயிரை மாய்த்துக் கொள்வதாகவும் இலங்கை உலக தரவரிசையில் இரண்டாம் நிலைக்கு அருகில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் மட்டும் 1,909 பேர் தூக்கிட்டு தவறான முடிவை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இலங்கையில் ஒவ்வொரு ஒரு லட்சம் மக்களில் 14 பேர் தவறான முடிவை மேற்கொள்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுவாகவே ஆண்களில் தவறான முடிவை மேற்கொண்டு உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகமாக காணப்படுகிறது.

அதே நேரத்தில், தனியாக வாழும் மக்களிடையே தவறான முடிவை மேற்கொள்ளும் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. திருமணமானவர்களிடையே இது குறைந்துள்ளதாகவும் ஆய்வுகள் காண்பிக்கின்றன. (நி-8)

# இழப்பீடு வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரிசி ஆலை உரிமையாளருக்கு 17 லட்சம் ரூபாயினைக் காப்புறுதி இழப்பீட்டு தொகையாக வழங்கியுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள அரிசி ஆலையொன்றில் 30 விவசாயிகளின் நெல் களஞ்சியபடுத்தபட்டிருந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் நிலவிய சீரற்ற கலா நிலையினால் வெள்ளம் களஞ்சிய சாலைகளுக்குள் உட்புகுந்தமையால் குறித்த நெல் மூடைகள் அழிவடைந்து இருந்தன.

இந் நிலையில் இலங்கை காப்புறுதி கூட்டுதாபனத்தின் சங்கானை கிளையில் குறித்த நபர் ஏற்கனவே 44,000 ரூபாய் வருடாந்த காப்புறுதித் தொகையாக செலுத்திய நிலையில் 17 லட்சத்து 9 ஆயிரம் ரூபாயினை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய பொதுக் காப்புறுதி முகாமையாளர் அஜித்குமார் வழங்கி வைத்தார்.

இதன் பொழுது சங்கானை கிளை முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (6-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Marine Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15184 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 35<br>உயரம்: 5'5'<br>தகைமை/தொழில்: NDT , Teacher<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் அல்லாத உத்தியோகம்<br>தொ.இ: G/13943 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L, Manager (pvt)<br>எதிர்பார்ப்பு: படித்தவர், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15185 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA Management Assistant<br>எதிர்பார்ப்பு: Engineer, Lecturer, Accountant, Lawyer<br>தொ.இ: G/9917 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>3 இல் சூரி செவ்<br>கி.பா:32 1/4<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: A/L, Manager (pvt)<br>எதிர்பார்ப்பு:படித்தவர்<br>தொ.இ: B/15186 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 45 1/4<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BA, DO(gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11011 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பம்

## சபையில் அறிவித்த பிரதியமைச்சர்

(கொழும்பு)

ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீளக்கட்டியெழுப்பும் வேலைதிட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என கைத்தொழில் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

போர் காரணமாக ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை பல வருடங்களாக மூடப்பட்டிருக்கின்றது.

இதனை திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றில் நேற்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்குப்பதிலளித்த பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க, இந்த ஓட்டுத் தொழிற்சாலை உட்பட அரசாங்கக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இருக்கின்ற பல்வேறு தொழிற்சாலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன.

குறித்த தொழிற்சாலை யுத்த நிலைமை காரணமாக 1990 ஆம் ஆண்டு தான் கைவிடப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் இதனை ஆரம்பிப்பதற்கு 2015 ஆம் ஆண்டு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நாம் 2024 ஆம் ஆண்டு திறைசேரியினால் 15 மில்லியன் ரூபாய் பெற்றுக் கொள்ளப்பட்டு இதன் வேலைகளை ஆரம்பிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் அளவில் வேலை திட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. இதற்கான மூலதனம் எமக்குத் தேவைப் படுகின்றது. கைத்தொழில்அமைச்சு வெற்றிகரமாக இந்த தொழிற்சாலைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆயத்தமாக இருக்கிறது எனத் தெரிவித்தார். (நி-8)

# யாழ் ⟷ திருச்சி விமான சேவை மார்ச் 30 ஆரம்பம்

(சென்னை)

யாழ்ப்பாணத்திற்கும் திருச்சிக்கும் இடையிலான விமான சேவை எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இண்டிகோ விமான சேவை அறிவித்துள்ளது.


அந்த வகையில் திருச்சியில் இருந்து நண்பகல் 01.25இற்கு புறப் படும் விமானம் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை மாலை 2.25 மணியளவில் வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 3.10 மணிக்கு புறப்படும் விமானம், திருச்சி விமான நிலையத்தை மாலை 4.05 மணிக்கு சென்றடையும் எனவும் இண்டிகோ விமான சேவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## குடியிருப்புகள் மீது தவறுதலாக குண்டு வீசிய தென்கொரியா



(சியோல்)

தென் கொரியப் போர் விமானம் ஒன்று நேற்று வியாழக்கிழமை பயிற்சியின் போது தவறுதலாக பொதுமக்கள் குடியிருப்புகள் மீது எட்டு குண்டுகளை வீசியதில் ஏழு பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களில் நால்வர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். வட கொரியாவின் எல்லைக்கு அருகிலுள்ள போச்சியோன் நகரில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த சம்பவத்தின் விளைவாக ஒரு தேவாலயக் கட்டடம் மற்றும் வீடுகளும் சேதமடைந்துள்ளன. விபத்து தொடர்பில் தென்கொரிய ஊடகங்களில் வெளியிடப்பட்ட படங்கள் ஒரு கட்டடத்தின் உடைந்த ஜன்னல் மற்றும் தேவாலயத்தின் சேதமடைந்த கூரையைக் காட்டுகின்றன.

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இந்தப் பயிற்சி அமெரிக்கப் படைகளுடனான கூட்டுப் பயிற்சியுடன் தொடர்புடையது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-8)

## பிலிப்பைன்ஸில் வெப்பம் மூடப்பட்ட பாடசாலைகள்



(மணிலா)

பிலிப்பைன்ஸில் அதிகரித்து வரும் வெயிலின் தாக்கத்தால் 50 இற்கும் மேற்பட்ட பாட சாலைகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு இணைய வழியாக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. வெயில் சுட்டெரிப்பதால் பகல் நேரத்தில் அவசியமின்றி பொதுமக்கள் வெளியே வர வேண்டாம் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

மணிலாவிலும் அதன் அருகே இருக்கும் வேறு இரு நகரங்களிலும் காற்றின் வெப்ப நிலை, ஈரப்பதன் அளவீடான வெப்பக் குறியீடு ஆபத்தான அளவை எட்டும் என அந்நாட்டு தேசிய வானிலை நிலையம் எச்சரித்துள்ளது.

இந்த வெப்பச் சலனத்தால் நீர்ச்சத்துக் குறைபாடு, வெப்பத் தாக்குதல் போன்றவை மக்களுக்கு ஏற்பட அதிக வாய்ப்பிருப்பதாகவும் அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிப்போர் பகல் பொழுதில் நீண்ட நேரம் வெளியில் இருப்பதைத் தவிர்க்குமாறு குறித்த நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் பிலிப்பைன்சின் பெரும்பகுதிகளில் வெப்ப அலை வீசியது. இதன் காரணமாக மாணவர்கள் பாடசாலைகளுக்கு நேரடி வகுப்புகளுக்காக வருவது தவிர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அமெரிக்காவுடன்

# சீனா அதிரடி

(பீஜிங்)

**அமெரிக்கா வரி விதிக்கும் போட்டிக்கு வந்தாலும் வர்த்தகப் போருக்கு வந்தாலும் வேறு எந்த போருக்கு வந்தாலும் தான் தயார் என சீனா அறிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

ட்ரம்பின் புதிய வரி விதிப்புக்கள் மூலமாக புதிய வர்த்தகப் போரை உலக நாடுகள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்து வருகின்ற நிலையில் கனடா மற்றும் மெக்சிக்கோவிற்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள 25 சதவீத வரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

இதேவேளை, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோழி, கோதுமை, சோளம் மற்றும் பருத்திக்கு சீனா கூடுதலாக 15 சதவீத

## மேகங்களை நேரடியாக கண்டுகழிக்க வாய்ப்பு

### முன்னணி விமான நிறுவனங்கள் பரிசீலனை



விமானப் பயண அனுபவத்தைக் கைமாற்றும் விதமாக வெளிப்படையான கூரை கொண்ட விமானங்கள் உருவாக்கப்படலாம் என சில முன்னணி விமான தயாரிப்பு நிறுவனங்கள் பரிசீலித்து வருகின்றன. இந்தப் புதிய கண்டுபிடிப்பு, விண்வெளி மற்றும் மேகங்களை நேரடியாகக் காணும் அனுபவத்தை வழங்கி பயணிகளுக்கு ஒரு வித்தியாசமான வான் வழிப் பயணத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

இதனால், குறிப்பாக சுற்றுலாத்துறையில் இது ஒரு முக்கிய புரட்சியாக அமையும் வாய்ப்பு உள்ளது. பயணிகள், மேகங்களை மீறி நடமாடும் உணர்வுடன், கண்ணுக்கு காட்சியாக வானத்தை ரசிக்கும் அனுபவத்தை பெறலாம்.

ஆனாலும் இதை நடைமுறைக்கு கொண்டுவர சிரமமாகலாம். விமானக் கூரையின் வலிமை, அழுத்தம் எதிர்ப்பு, வெப்ப சீராக்கம் போன்ற அம்சங்கள் மிகவும் முக்கியமானவை. மேலும், பயணிகளின் உயர பயம் மற்றும் பிரசன்னமான ஒளிச் செறிவு போன்ற அம்சங்களும் கவனிக்க வேண்டியவை.


இருப்பினும், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் மூலம் இதை செயற்படுத்தும் முயற்சிகள் தொடர்கின்றன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ன் மோதத் தயார் ...டி அறிவிப்பு!

...உக்கு
...லும்
...ான்
...ாக
...வளி



அமெரிக்கா
...க்குமதி செய்
...கோதுமை,
பருத்திக்கு
15 சதவீத

வரியை விதித்துள்ளது.

இந்த வரி விதிப்பு எதிர் வரும் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று சீனாவின் சுங்க வரி ஆணையகம் தெரிவித் துள்ளது.

இந்நிலையில், அமெ ரிக்காவுடன் வர்த்தகப் போர் ஏற்பட்டால் இறுதி வரை போராட சீனா தயார் என்று வெளியுறவு அமைச்சரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், பென்டானில் என்ற வேதிப்பொருள் ஏற்றுமதி பிரச்சினைக்கு அமெரிக்கா தீர்வு காண விரும்பினால் பேசித் தீர்ப்பதே சரியான வழி என்றும் சீனாவுக்குச் சம அந்தஸ்து அளித்து அமெரிக்கா பேச்சு நடத் துவதே பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரே வழி என்றும் சீனா அறிவித் துள்ளது. (நி-8)

## உலகின் மிகப்பெரிய பனிப்பாறை ஜோர்ஜியாவில் கரை ஒதுங்கியது



(ஜோர்ஜியா)

2020 ஆம் ஆண்டு முதல் அந்தாட்டிக்காவில் இருந்து வடக்கு நோக்கி நகர்ந்து வந்த A23a என அறியப்படும் உலகின் மிகப் பெரிய பனிப்பாறை கரை ஒதுங்கியுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.


சுமார் ஒரு டிரில்லியன் மெற்றிக் தொன் எடை யுள்ள A23a தெற்கு அத்தி லாந்திக் பெருங் கடலில் உள்ள பிரிட்டிஷ் வெளி நாட்டுப் பிரதேசமான தெற்கு ஜோர்ஜியாத் தீவில் கரை ஒதுங்கியுள்ளதாக கடந்த செவ்வாய்க்கிழமை வெளி யிடப்பட்ட ஐக்கிய இராச்சி யத்தின் தேசிய துருவ ஆராய்ச்சி நிறு வனத்தின் பிரிட்டிஷ் அண்டார்டிக் சர்வே அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இந்த பனிப்பாறையை அளவிட் டப்போது 3.672 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்தது. இது ரோட் தீவை விட சற்று சிறியதும் லண் டனை விட இரண்டு மடங்கு பெரியதுமாக காணப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டு அந் தாட்டிக்காவிலுள்ள ஃபில்ச் னர் பனிக்கட்டியிலி ருந்து உடைந்தது. அன்றிலி ருந்து, வெட்டெல் கடலில் தெற்கு ஓர்க்னி தீவுகளுக்கு அருகில் கட லின் அடிப்பகுதி சேற்றில் சிக்கிக் கொண்டது.


இந்நிலையில் கடந்த 2020ஆம் ஆண்டு இந்த பனிப்பாறை வடக்கு நோக்கி மெதுவாக நகர ஆரம்பித் ததாக விஞ்ஞானிகள் கண்ட றிந்தனர்.

ஆனால் 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அது கடலுக்கடியில் உள்ள ஒரு மலையைச் சுற்றி பல மாதங்களாக சிக்கிக் கொண் டது. இதனால் வடக்கு நோக் கிய அதன் எதிர்பார்க்கப்பட்ட பயணத்தை தாமதப்படுத்தி யது. (நி-8)



## செவ்வாய் கிரகத்தின் பரந்து விரிந்த காட்சி

### நாசா பகிர்ந்த வீடியோ



(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆய்வு முகமையான நாசா, நிலவின் மேற்பகுதியில் சஹாராப் பாலைவனத்தை விட 100 மடங்கு பெரிதான மரியா எனும் பகுதியில் நீர் உறைந்த நிலையில் பனிக்கட்டியாக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே செவ்வாய்க் கிரகம் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டு அது தொடர்பான புகைப்படம் மற்றும் விடியோக்களை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், தற்போது நாசா வெளியிட்டுள்ள வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

செவ்வாய்க் கிரகத்தின் பரந்து விரிந்த காட்சிகள் என வெளியிடப்பட்டுள்ள வீடியோ குறித்து பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. (நி-8)




(வோஷிங்டன்)

அமெரிக்கப் பொருட்க ளுக்கு பதிலடி வரி விதிக்கப் படும் என கனடா அறிவித் ததைத் தொடர்ந்து, அந் நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக அமெ ரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்ப் எச்சரித்துள் ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்,அண்டை நாடுக ளான கனடா மற்றும் மெக் சிக்கோவில் இருந்து இறக் குமதி செய்யப்படும் பொருட் களுக்கு, 25 சதவீத வரியை விதிக்கும் உத் தரவை பிறப்பித்துள் ளார்.

இதற்கு பதிலடி கொடுக் கும் வகையில், அமெரிக் காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்க ளுக்கு, 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிர தமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார்.

அமெரிக்கப் பொருட்க ளுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் எனக் கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந் நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.


இது குறித்து, ட்ரம்ப் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக் கையில் கூறியிருப்பதா வது, கனடா பிரதமர் ட்ரூ டோவிடம், அவர் அமெ ரிக்கா மீது பழி வாங்கும் வரியை விதிக்கும்போது, நமது பரஸ்பர வரி உட னடியாக அதே அளவு அதிகரிக்கும் எனக் கூறி யுள்ளார்.

கனடாவை அமெரிக்கா வின் 51 ஆவது மாகாண மாக மாற்றும் யோச னையை அமெரிக்க ஜனா திபதி ட்ரம்ப் கூறிய போது, கனடா பிரதமர் ட்ரூடோ கடுமையாக எதிர்ப்பு தெரி வித்தார். அப்போது முதல் கனடா ஆளுநர் என ட்ரம்ப் குறிப்பிட்டு பதிவுகளை வெளியிடுகின்றமை குறிப் பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் பெருங்குடல் புற்றுநோய்

## சுகாதார அமைச்சகம் தகவல்



(கொழும்பு)

இலங்கையில் பெருங்குடல் புற்றுநோய் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவது கவலை அளிப்பதாகவும், சுமார் 3,000 நோயாளிகள் தற்சமயம் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் குளோபோகன் 2022 தரவுகளின்படி, சர்வதேச அளவில் பெருங்குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 1.9 மில்லியன் ஆகும். இறப்புகளின் எண்ணிக்கை 9 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

இந்த நோயின் அறிகுறிகளை முன்கூட்டியே கண்டறிவது பெரும்பாலும் முழுமையான குணப்படுத்துதலுக்கு வழிவகுக்கும் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் ஹசராலி பெர்னாண்டோ தெரிவித்தார்

புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவதால் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது என்று அவர் எடுத்துரைத்தார். (நி-8)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 24, கன்னியாஸ்திரி மட வீதி, 18/5 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல-111/4, மடம் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகம் பெண் பற்றிமா அவர்கள் 08.09.2004ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 48ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனம் பற்றிய சாசனம் எதுவும் தன்னிடம் இல்லையென்றும் ஆனால் 25 வருடத்திற்கு மேலான நீண்டகால தமது ஆட்சியில் உள்ளதென்று வெளிப்படுத்தி தமது மகன் சண்முகம் மோகனகுமாருக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை, இல-111/4, மடம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகம் மோகனகுமார் 26.07.2006ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 269ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தனது தகப்பனாரான ஆறுமுகம் சண்முகத்திற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, இல-111/4, மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகம் 10.07.2017ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 3032ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தனது பேர்த்தியாகிய மோகனகுமார் பெண் ரசிகாவிற்கு தனது சீவிய உரித்துக்கும் இவவின் தாயாரான திருமதி. சங்கேஸ்வரி மோகனகுமார் என்பவரின் சீவிய உரித்துக்கும் அமைய வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, இல-52, திருநாவற்குளம், வவுனியாவைச் சேர்ந்த மோகனகுமார் கைம்பெண் சங்கேஸ்வேரி மற்றும் மோகனகுமார் ரசிகா ஆகியோர் 25.12.2024ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தியாகலிங்கம் கணதீபன் முகதாவில் 2848ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-149/1, பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை நிக்ஸ்சன் மற்றும் நிக்ஸன் பெண் தர்சினி ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், சுண்டிக்குளிக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கரையூர் இறை, "தேவரிக்குளம்" நிலப்பரப்பு 1 1/2 ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.சுப்பிரமணியம் அவர்களினால் 13.06.2006 ஆம் திகதி 952ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட நில அளவைப் படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுள்ளதன்படி குளிகள் பதினைந்து தசம் இரண்டு ஐந்து (15.25) ஆக அளந்து காணப்பட்டுள்ளது.

இதற்கு எல்லைகள்.

கிழக்கு :- மகேந்திரம் ஜொய்சியின் ஆதனம்.

வடக்கு :- தேவரிக்குளம்.

மேற்கு :- வாய்க்கால்.

தெற்கு :- ஒழுங்கை.

இவ்வாதனத்தின்,

G.S பிரிவு - J/74, D.S பிரிவு - யாழ்ப்பாணம், உள்ளூராட்சி சபை - யாழ். மாநகர சபை.

தற்போது செபஸ்தியாம்பிள்ளை நிக்ஸ்சன் மற்றும் நிக்ஸ்சன் பெண் தர்சினி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த-திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செபஸ்தியாம்பிள்ளை நிக்ஸ்சன் மற்றும் நிக்ஸ்சன் பெண் தர்சினி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

(சி-2393)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 08 வைமன் வீதியில் அமைந்துள்ள 21/1, 21/2 எனும் ஆதனம் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் மாணிக்கம் பெண் சின்னாச்சி எனப் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கான யாழ் நொத்தாரிசு S.K.ஆபிரகாம் முகதாவில் 1930.04.07ஆம் திகதி 15091ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி தொலைந்துவிட்டதாக கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வைமன் வீதியைச் சேர்ந்த நமசிவாயம் மாணிக்கமும் பெண் சின்னாச்சிப்பிள்ளையும் என்பவர்கள் யாழ் நொத்தாரிசு ஆ.தனபாலசிங்கம் முகதாவில் 1944.04.27ஆம் திகதி 50ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி மூலம் வண்ணார் பண்ணை கிழக்கு வீரசிங்கம் குமரசிங்கம், வீரசிங்கம் இராஜசிங்கம், வீரசிங்கம் தனபாலசிங்கம், வீரசிங்கம் விஜயசிங்கம், வீரசிங்கம் காராளசிங்கம் என்பவர்களுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வைமன் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம் பெண் சொர்ணலெட்சுமியும் என்பவர் யாழ் நொத்தாரிசு ஆ.தனபாலசிங்கம் முகதாவில் 1969.07.17ஆம் திகதி 6903ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வண்ணார்பண்ணை கிழக்கு வீரசிங்கம் குமரசிங்கம், வீரசிங்கம் தனபாலசிங்கம், வீரசிங்கம் விசயசிங்கம், வீரசிங்கம் காராளசிங்கத்திற்கும் தம்பையா வல்லிபுரத்தாரிற்கும் குறித்த பாதை உரித்தையும் வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் வீரசிங்கம் விசயசிங்கம் என்பவர் யாழ் நொத்தாரிசு ஆ.தனபாலசிங்கம் முகதாவில் 1969.07.17ஆம் திகதி 6905ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வீரசிங்கம் தனபாலசிங்கம் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ் நொத்தாரிசு ஆ.தனபாலசிங்கம் முகதாவில் 1969.07.17ஆம் திகதி 6908ஆம் இலக்க பிரிவிடுதல் உறுதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் வீரசிங்கம் தனபாலசிங்கம் என்பவர் யாழ் நொத்தாரிசு இராமலிங்கம் பாலசுப்பிரமணியம் முகதாவில் 1977.06.12ஆம் திகதி 323ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கதிர்காமு இராசரத்தினத்திற்கும் பெண் நளாயினிதேவி இற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் முத்தையா கனகசபையும் பெண் நளாயினிதேவியும் யாழ் நொத்தாரிசு செல்லையா மகேசன் முகதாவில் 1990.05.05ஆம் திகதி 4464ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் வீரசிங்கம் தனபாலசிங்கம் கைம்பெண் மகேஸ்வரி என்பவர் யாழ் நொத்தாரிசு மு.ஆ.இராகிருஷ்ணன் முகதாவில் 2011.09.09ஆம் திகதி 715ஆம் இலக்கத்தில் உருத்து விளம்பல் சமர்ப்பித்துள்ளார்.

குறித்த ஆதனம் வீரசிங்கம் தனபாலசிங்கம் கைம்பெண் மகேஸ்வரி என்பவர் யாழ் நொத்தாரிசு மு.ஆ.இராகிருஷ்ணன் முகதாவில் 2011.09.09ஆம் திகதி 716 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் இரத்தினம் செல்வநாயகம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கம் என்பவர் யாழ் நொத்தாரிசு மு.ஆ.இராகிருஷ்ணன் முகதாவில் 2011.09.24ஆம் திகதி 731ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் இரத்தினம் செல்வநாயகம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இரத்தினம் செல்வநாயகம் என்பவர் யாழ் நொத்தாரிசு மு.ஆ.இராகிருஷ்ணன் முகதாவில் 2013.05.30ஆம் திகதி 978ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

### ஆதன இடாப்பு

**முதலாம் ஆதனம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி, யாழ்ப்பாண பிரதேச செயலகம், யாழ் மாநகரசபை (J/105) கந்தர்மடம் தென்கிழக்கு கிராமஅலுவலர் பிரிவு வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "ஐயன் வளவும் ஆணைக்காரன் குருவித் தோட்டம்" நிலப்பரப்பு ஒன்று குளி பதினொன்றும் (நில.பர.1குளி 11) வீடும் வான்பயிர் செய்பயிர்களும்

இதற்கெல்லைகளாக:-

கிழக்கு - நல்லதம்பி இராசநாயகத்தின் உரிமைக்காரரின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும்

மேற்கு - சிவானந்தன் பரமகுருநாதனுக்கும் தம்பையா வல்லிபுரநாதனுக்கும் உரிய ஆதனங்கள்

வடக்கு - உத்தேசம் பத்தடி (10') அகலம் கொண்ட பாதை நிலம் தெற்கு சிவானந்தம் பரமகுருநாதனுக்குரிய ஆதனமும் இதடங்கலும்

இன்னும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வரி வாய்க்கால் பாவிப்புரித்தும்

மேலும் வடக்கே உள்ள ஒழுங்கையூடாக சென்று கிழக்கே திரும்பி வைமன் வீதியைச் சென்றடையலாம்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி, யாழ்ப்பாண பிரதேச செயலகம், யாழ் மாநகரசபை (J/105) கந்தர்மடம் தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவு வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "ஐயன் வளவும் ஆணைக்காரன் குருவித் தோட்டம்" நிலப்பரப்பு இரண்டு குளி ஒன்பது (நில.பர.2குளி 9) இது 1969ஆம் ஆண்டு தை மாதம் 28ம் திகதி நிலஅளவையாளர் ரி.கந்தையா அவர் களால் 4344ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் 2ஆம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் கிழக்கு பக்கமாக நிலப்பரப்பு சைபர் குளி பதினாறரையும் (நில பர 0 குளி 16 1/2)

இதற்கெல்லைகளாக:-

கிழக்கு - குறித்த படத்தில் சுட்டப்பட்ட 3ம் தூண்டு

மேற்கு - கனகசபை பெண் நளாயினியின் ஆதனம்

வடக்கு - ஒழுங்கை

தெற்கு - சிவானந்தன் பரமகுருநாதனுக்கும் வீரசிங்கம் தனபாலசிங்கத்திற்குரிய ஆதனங்களும் இதடங்கலும் அருகருகே உள்ள இரு ஆதனங்களும் ஒன்றாக்கப்பட்டு பேணப்படும்

### ஆதன இடாப்பு

மேற்படி இறை "ஐயன் வளவும் ஆணைக்காரன் குருவித் தோட்டமும்" இரு ஆதனங்களும் ஒன்றாக்கப்பட்டு மொத்த நிலப்பரப்பு இரண்டும் குளி ஒன்பதரையும் (நில.பர.2குளி 9 1/2) இது 2011ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 28ஆம் திகதி நிலஅளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 614ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் லொற் 2 என சுட்டப்பட்ட பாகமான நிலப்பரப்பு இரண்டும் குளி ஒன்பது தசம் இரண்டு (நில.பர. 2 குளி 09.2)

கிழக்கு - எல்.எஸ்.பி.நல்லதம்பி இராசநாயகத்திற்குரிய ஆதனம்

மேற்கு - லொற் 1 என சுட்டப்பட்ட பாகமாகும்.

வடக்கு - உத்தேசம் பதினொரடி (11') அகலம் கொண்ட பாதை நிலம்

தெற்கு - சிவானந்தனர் பரமகுருநாதனுக்கும் வீரசிங்கம் தனபாலசிங்கத்திற்குரிய ஆதனங்களும் இதடங்கலும் இன்னும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கம் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தனபாலசிங்கம் ஜெயரட்ணசிங்கம் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**ஆணையாளர்,**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்**

(சி-2394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருநோய் தாக்கத்தால் வாழைச்செய்கை பாதிப்பு

## செய்கையாளர்கள் கவலை



(யாழ்ப்பாணம்)

**தென்னையைத் தொடர்ந்து வாழையிலும் பரவும் ஒருவித கருநோய் தாக்கத்தினால் தமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளதாக வாழைச்செய்கையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.**

யாழ்.மாவட்டத்தின் நீர்வேலி, புத்தூர் பகுதிகளில் பிரதான செய்கையாக வாழைச் செய்கை காணப்படுகின்றது.

குறித்த இரு பகுதிகளிலும் சுமார் 150 ஏக்கரில் வாழைச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வாழையில் பரவும் ஒருவித கருநோய்த்தாக்கம் காரணமாக தமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது என வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

எனவே குறித்த நோய்த் தாக்கம் ஏனைய பகுதிகளுக்கு பரவ முன் சம்பந்தப்பட்ட உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுத்து தடுக்க வேண்டும் என வாழைச் செய்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(6-8)



# சோழியபுரம் பத்ம வெளியீடு

**முப்புரம் எரிசெய்த அச் சிவனுறை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணியரும் அப்புன மதனிடை-யிவமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை அக்கண மணமருள் பெருமாளே**

**என் இனிய நெஞ்சங்களே!**

விநாயகரின் பெரிய வயிறு இந்த உலகமே அவரினுள் அடக்கம் என்பதைத் தெரிவிக்கின்றது. ஆகாயம் உட்பட எல்லாப்பொருட்களும் தன்னுள் அடங்கும் என்பதை தனது வயிறு மூலம் காட்டுகின்றார். எனவே விஸ்வரூப தரிசனராகக் காட்சி தருகின்றார். பெருவயிற்றின் தத்துவம் இப்போது தெரிகின்றதல்லாவா! உலகமெங்கும் விநாயகர் கோவில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருப்பது எதற்காக? மேன்மைகொள் சைவ-நீதியை உலகெங்கும் நிலைநாட்டுவதற்காகவே என்பதை உணர்வோமாக.

**விநாயகரை நினைக்க மறந்த சிவபெருமானுக்கு நடந்தது என்ன?**

ஒரு கடிதம் எழுதும் போது கூட பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது தமிழர் மரபு. காரணம் விநாயகரே முழுமுதற்கடவுள் என்பதாகும். சிவபெருமான் முப்புரங்களையும் எரிக்கப் புறப்பட்ட போது விநாயகரை நினைக்க மறந்து விட்டார். எனவே செல்லும் வழியில் அவரது தேர் அச்சு உடைந்து விட்டது. விநாயகரை வணங்கிய பின்னரே எந்தச் செயலையும் தொடங்க வேண்டும் என்று உத்தரவிட்டவரே சிவபெருமான் தான். அவரே அந்த விதியைக் கடைப்பிடிக்காதலால் இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது. சிவபெருமான் தனது தவறை உணர்ந்து விநாயகரை வணங்கினார்.

**விநாயகரை குட்டிக் கும்பிட மறந்த முருகனுக்கு நடந்தது என்ன?**

வள்ளி முருகனை ஏமாற்றும் போது முருகன் அண்ணா! அண்ணா! என்று கூப்பிடுவார். அப்போது விநாயகர் கேட்டும் கேளாதது போல் இருப்பார். இரண்டாவது முறை கூப்பிடுவார். மீண்டும் கேளாதது போல் இருப்பார். முருகன் குட்டிக் கும்பிடாத தவறை உணர்ந்து மூன்றாவது முறை தோப்புக் கரணம் போட்டுக் குட்டிக் கும்பிடுவார் உடனே யானை வருகிறது தெய்வங்களுக்கே இந்த நிலை என்றால் மனிதர்களுக்கு...? ஈசுர விநாயகர் எங்கள் தீராத பிரச்சினையைத் தீர்க்க வந்து தன்னை அடையாளம் காட்டியருளிவிட்டு வந்தும் வராதது போல் இருக்கின்றார் என்றால் முருகனின் நிலைதான் எங்களுக்கும். அதனால் தமிழ் மக்கள் எல்லோரும் ஈசுர விநாயகரின் புகழைப் பாடிப்பரவி தோப்புக் கரணம் போட்டு நெற்றியிலே குட்டி வணங்கி வரவேற்போம் என்று அடியேன் அறியத் தந்திருந்தேன். மீண்டும் மீண்டும் குட்டிக் கும்பிடுங்கள். நாட்டிற்கு மட்டுமல்ல வீட்டுப்பிரச்சினைகளுக்கும் ஓடி வருவார்.

'அவனின்றி ஓர் அணுவும் அசைய முடியாது'
' ஆளில்லாதவர்க்கு ஆண்டவனே துணை நிற்பான்'

**மன்னிப்பு என்பது...**

தெரியாமல் செய்யும் குற்றத்திற்கு மன்னிப்பு உண்டு. தெரிந்து செய்யும் குற்றம் மகாகுற்றம். இதற்கு மன்னிப்பே கிடையாது. மன்னிக்கவும் முடியாது. மன்னிப்பதில் மனிதரை விட இறைவன் கருணை கொண்டவர். மன்னித்து விடுவார். தெரிந்து செய்யும் குற்றத்திற்கு நிச்சயம் தண்டனைதான். தெய்வ தண்டனையிலிருந்து யாரும் தப்பிவிட முடியாது. நாங்கள் ஒரு செயலைச் செய்கின்றோம் என்றால் யாரும் காணவில்லை என்று நினைக்கக்கூடாது. அங்கே இறைவன் எங்களைப் பார்த்த வண்ணம் இருக்கின்றார். அதனால் மனிதரிடம் தப்பிவிடலாம் இறைவனிடம் தப்பவே முடியாது. அதற்காகத்தான் மனச்சாட்சிக்கு சரியாக நடக்க வேண்டும் என்று கூறுவது

**'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'**

**வரவேற்பு என்பது முக்கியமானது...**

ஒவ்வொரு விழாவிலும் பாருங்கள் நிறைகுடம் வைத்து விபூதி, சந்தனம், குங்குமம் கொடுத்து விழாவிற்கு வருகின்றவர்களை வரவேற்பார்கள். காரணம் வருபவர்கள் சந்தோசமாக இருந்தால் தான் அந்த விழாச் சிறப்பாக அமையும். வரவேற்பு இல்லை என்றால் வந்தவர் எப்ப போனவர்களென்றே தெரியாது. வரவேற்கும் விதத்தில் தான் வந்தவர்கள் போகும் போது சொல்லி விட்டுப் போவார்கள். மேலும் வந்தவர்களைக் கௌரவித்து சிற்றுண்டியோ குளிர்பானமோ கொடுத்து சந்தோசப்படுத்துவார்கள். அப்போது தான் விழாக்காரரின் காரியங்கள் சிறப்பாக அமையும். அத்துடன் அடுத்த விழாவிற்கும் ஓடி வருவார்கள். அதுபோல் எங்கள் தீராத பிரச்சினையைத் தீர்க்க வந்தருளிய இறை நீதிமன்ற நீதியரசர் சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாயகரின் புகழைப் பாடி வணங்கி வரவேற்று மகிழ்விப்போமாக.

**நன்றி என்பது மிக முக்கியம்...**

விழாவிற்கு வருகை தந்த எல்லோரும் எத்தனையோ வேலைகளை விட்டு விட்டு எங்கள் அழைப்பை ஏற்று வருகின்றார்கள். சிலர் கந்தோரில் லீவு போட்டும் வருவார்கள். எங்கள் விழாவை வந்து சிறப்பித்தமைக்கு நன்றி கூற வேண்டியது எமது கடமையாகும். அதனால் தான் விழா முடியும் போது எல்லோருக்கும் நன்றி கூறுவார்கள். ஒரு விழாவிற்கு வரவேற்பு எப்படி முக்கியமோ அது போல நன்றி கூறுவதும் மிக முக்கியமாகும். **'நன்றி மறப்பது நன்றன்று'**
இவைகள் எமது அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமான செயற்பாடுகள் ஆகும்.

**அதிசயம் ஆனால் அற்புதம் பிள்ளையாரால் பெருமை பெற்ற ஊர்**

ஆற்றங்கரையிலும் அரச மரத்தடியிலும் வீற்றிருக்கும் விநாயகர் மலை மேல் வீற்றிருப்பது ஆச்சரியம் தான். விநாயகருக்கு இவ்வாறு ஆசை எழக் காரணம் உச்சியிலிருந்து உலகைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் ஆகும். இந்தியாவிலே திருச்சிமலைக் கோட்டையில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் உச்சிப்பிள்ளையார் மகா சக்தி வாய்ந்தவர். காவிரிக் கரையில் அமைந்துள்ள இந்தக் கோயிலுக்குக் கூறப்படும் புராணக்கதை ஆச்சரியமானது. அதாவது இராமபிரான் இராவணனைக் கொன்று சீதையை மீட்டு அயோத்தி சென்றார். விபீஷணன், சுக்ரீவன் அனுமன் ஆகியோரும் அவருடன் சென்றனர். அயோத்தியில் இராமர் பட்டாபிஷேகம் முடித்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்புகையில் நினைவுப் பரிசாக ரங்கநாதர் சிலையை பெற்றுக் கொண்டு விபீஷணன் இலங்கைக்கு வருகின்றார். அகன்ற காவிரியில் சற்று உபவாசம் செய்ய எண்ணினார். அப்போது அங்கு சிறுவன் உருவில் நின்று கொண்டிருந்த விநாயகரிடம் ரங்கநாதரின் சிலையை சிறிது நேரம் வைத்திருக்குமாறு கொடுத்து விட்டுச் சென்றார். விநாயகர் சிறிது நேரம் பார்த்து விட்டு அச்சிலையை பூமியில் வைத்து விட்டு அருகில் இருந்த மலையில் போய் அமர்ந்து கொண்டார். திரும்பி வந்த விபீஷணன் சிறுவனைக் காணாது தேடினார். அப்போது சிலை கீழே இருப்பதைக் கண்டு அதை எடுக்க முயற்சித்த போது அவரால் நகர்த்த முடியவில்லை. அதனால் இலங்கைக்கு கொண்டு வர இருந்த ஸ்ரீ ரங்கநாதர் விநாயகரின் அருளால் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளினார்.

**தனக்குத் தானே இடத்தை விரும்பி எழுந்தருளிய விநாயகர்...**

விபீஷணன் தான் சிலையைக் கொடுத்த அந்தச் சிறுவன் அங்கிருந்த மலையின் உச்சியில் அமர்ந்திருப்பதைக் கண்டு கோபமடைந்து அச்சிறுவனின் தலையில் குட்டு வைத்தான் என்பது வரலாறு. சிறுவனாக இருந்த விநாயகர் அப்படியே சிலையாகி விட்டார். இப்போதும் உச்சிப் பிள்ளையார் தலையில் குட்டிய குட்டின் வடு காட்சியளிக்கின்றது. இப்படிச் சிறப்பு வாய்ந்த விநாயகர் தான் இந்தியாவின் தமிழ் மக்களைக் காக்க திருச்சி மலைக் கோட்டையின் மீது சிங்காரமாய் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். படுத்திருக்கும் யானையைப் போன்று மலையின் தோற்றம், யானையின் தலை உச்சியில் கோயில் கோயிலுக்கு செல்ல 417 படிகள் கட்டப்பட்டுள்ளன. அடியேனுக்கும் குடும்பத்துடன் சென்று அவரை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.அறுகம்புல்லு மாலை போட்டு அர்ச்சனை செய்து அவரை வணங்கி அவரின் அனுக்கிரகத்தைப் பெற்றேன். யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும். நீங்களும் இந்தியா சென்றால் திருச்சிக்குச் சென்று உச்சிப் பிள்ளையாரை வணங்கி அருளைப் பெறுங்கள்.

'உச்சிப் பிள்ளையார் கோயில் கொண்ட இடம் திருச்சி மலையிலே'
'ஈசுர விநாயகர் கோயில் கொண்ட இடம் சுழிபுரம்-பறாளாயிலே'
இருவர் திருப்பாதங்களும் போற்றி! போற்றி!! போற்றி!!!

**சோழியூரான் பிறைசூடிக்குரு,
ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும்,
பரம்பரைப் பரிபாலகரும்.**

(3589)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
07.03.2025

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
# கிளிநொச்சி சேவைச்சந்தை கடைத்தொகுதியில் அமைந்துள்ள கடைகளினை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலான கேள்வி கோரல்

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 07.03.2025 தொடக்கம் 24.03.2025 ஆம் திகதி வரை
மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 மணிவரை (அலுவலக நேரம்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :-25.03.2025 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
மு.ப 10.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 25.03.2025 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
மு.ப 10.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கரைச்சி பிரதேசசபை, தலைமை அலுவலகம்,

**கிளிநொச்சி சேவைச்சந்தை** கடைத்தொகுதியிலுள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடைஇல 01 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |
| 02 | கடைஇல 02 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |
| 03 | கடைஇல 03 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |
| 04 | கடைஇல 04 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |
| 05 | கடைஇல 05 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |
| 06 | கடைஇல 06 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |
| 07 | கடைஇல 07 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |
| 08 | கடைஇல 08 | 22,500.00 | 1,000.00 | 100,000.00 | 5,400,000.00 |

**நிபந்தனைகள்:**

1. மேற்குறித்த கடைகளுக்கு உள்ளக ரீதியில் அதாவது ஏற்கனவே கிளிநொச்சி சேவைச்சந்தைக்குள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்களிடமிருந்து மட்டும் கேள்விகளானவை கோரப்படுகின்றன.
2. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைச்சி பிரதேசசபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
3. கரைச்சி பிரதேச சபையினால் ஏற்கனவே கோரப்பட்ட கேள்விகள் மூலம் நீண்டகால குத்தகைதாரராக தெரிவு செய்யப்பட்டவர்கள் எவரும் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதுடன் அவ்வாறு தவறுதலாக விண்ணப்பித்திருப்பின் அவருடைய கேள்விப்பத்திரமானது சபையினால் எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஏற்கனவே கிளிநொச்சி சேவைச்சந்தைக் கடைகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்கள் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியுமாயினும் குறித்த கடைகளுக்குரிய 28.02.2025 ஆம் திகதி வரையான வாடகைப்பணத்தினை எவ்வித நிலுவைகளும் இன்றி முழுமையாக செலுத்தியிருத்தலை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். மேலும் குறித்த விண்ணப்பதாரர்கள் இக் கேள்வி கோரலில் சித்திகர குத்தகைதாரராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ஏற்கனவே வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளினை சபைக்கு மீள கையளிப்புச்செய்தல் கட்டாயமானதாகும்.
5. கடை இல 01 மற்றும் 02 ஆகியவை உள்ளூர் உற்பத்தி பொருட்கள் தொடர்பான வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்.
6. ஏனைய கடைகளில் தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
8. ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களில் ஒருவர் மட்டுமே தனது பெயரில் கேள்வி விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியும். (குடும்பம் என கருதப்படுவது இங்கு கணவன், மனைவி மற்றும் திருமணமாகாத பிள்ளைகளை குறிக்கும்) மற்றும் குறித்த அந்நபர் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியுமாயினும் ஒரு கடைக்கு மாத்திரமே வாடகை ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கடைத்தெரிவானது கேள்விச்சபையினாலேயே தீர்மானிக்கப்படும்.
9. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், வதிவிடம் மற்றும் ஆள் அடையாளம் ஆகியவற்றை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப்பிரதி, குடும்ப அட்டை பிரதி மற்றும் தற்போது கிளிநொச்சி சேவைச்சந்தைக்குள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வர்த்தகர் என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு பிரதேச சபையுடன் 2025 ஆம் ஆண்டிற்காக மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரதி அல்லது வரிச்சான்றிதழ் / உரிமத்தின் பிரதி என்பவற்றுடன் நேரடியாக கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சிக்கு சமூகமளித்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவரும் கேள்விப்பத்திரங்கள் விண்ணப்பிக்க முடியாது. மேற்படி அவர்களுடைய கேள்விப்பத்திரங்கள் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
11. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் **25.03.2025 ஆம் திகதி முற்பகல் 10.00** மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு **25.03.2025 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
12. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
13. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.
14. சித்திகரக் குத்தகைதாரர் அறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களுக்குள் கேள்வி சமர்ப்பித்த முழுத்தொகை (ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் - KEY MONEY) ஐயும் மூன்று மாதகால முற்பண வாடகையினையும் செலுத்தி ஒப்பந்தம் ஒன்றை செய்தல் வேண்டும். இதில் ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் (KEY MONEY) எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படமாட்டாது.
15. முற்குறிப்பிட்ட 13, 14 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து கேள்விகள் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
16. குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மாதாந்த கடை வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துவதற்கு உடன்படுவதுடன் மாத வாடகைப் பணத்தினை குறித்த மாதத்தின் இறுதி வேலைநாளுக்குள் செலுத்துவதற்கும் உடன்படவேண்டும். தவறின் அதன் பின்னர் 10 நாட்களுக்குட்பட்டு செலுத்தும் பட்சத்தில் மாத வாடகையின் 10% தண்டப்பணத்தினையும் காலதாமதம் 10 நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் 15% தண்டப்பணத்தினையும் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
17. கடையை வாடகைக்கு எடுப்பவரினாலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது கணவன் / மனைவி / வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன், மகள்).
18. சபையின் அனுமதியின்றி எதுவித வியாபார நிலையத்தினுள் எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
19. தெரிவுசெய்யப்படாத கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
20. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரியினை / உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்திவரிச் சான்றிதழினை / உரிமத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
21. குறித்த குத்தகை நிலையத்திற்கான ஏனைய இதர வசதிகளுக்கான கட்டணங்கள் (மின்சாரக்கட்டணம் உட்பட) அனைத்தும் குத்தகைதாரராலேயே செலுத்தப்பட வேண்டும்.
22. சித்திகர குத்தகைதாரர் கரைச்சி பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
23. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
24. சபையின் செயலாளரின் இந்த நிபந்தனைகள் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் செயலாளரிற்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
25. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு.செ.செல்வகுமார்**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

திகதி :- 07.03.2025

(சி-2395)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான நடத்தை என்பது கருணை நிறைந்த தன்மையாகும்.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணத்தில் சைவப் பாடசாலைகள் **இந்துபோட்** என்ற அமைப்பினால் நிர்வகிக்கப்பட்டு வந்தமை யாவரும் அறிந்ததே.

அடிமட்டக் கிராமங்கள் தோறும் பாடசாலைகளை நிர்மாணித்து அவற்றை இயக்கி தமிழ் மாணவர்களின் கல்விக்கு பேருதவியாற்றிய இந்துபோட் அமைப்பை இப்போது பலரும் மறந்துபோயினர்.

இவ்வாறான நிலைமைக்கு மூலகாரணம் 1962 காலப்பகுதியில் தனியார் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபோது, எந்த வித நிபந்தனைகளும் இல்லாமல் இந்துபோட் நிர்வகித்த அத்தனை சைவப் பாடசாலைகளும் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

அதன் காரணமாக வடபுலத்தில் இந்துபோட் நிர்வகித்த எந்தப் பாடசாலையும் இப்போது இந்துபோட்டின் ஆட்சி அதிகாரத்துக்குள் இல்லை.

அதேநேரம் கிறிஸ்தவ மிசனரிகளும் சபைகளும் ஆரம்பித்த பாடசாலைகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்போது அவர்கள் மிக இறுக்கமான நிபந்தனைகளை விதித்து அரச நிதி உதவி கிடைக்கின்ற பாடசாலைகள் என்ற வகுதிக்குள் தங்களின் பாடசாலைகளைக் கொண்டு வந்தனர்.

இதன் காரணமாக அதிபர், ஆசிரியர்கள் மற்றும் இதர ஆளணிகளின் நியமனங்களை குறித்த கிறிஸ்தவ பாடசாலைகள் தங்களின் அதிகாரத்துக்குள் வைத்துக்கொண்டு, அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை அரசாங்கத்திடம் விட்டு விட்டனர்.

தவிர, மாணவர் அனுமதி மற்றும் மாணவர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள் என்பவற்றைத் தீர்மானிக்கின்ற அதிகாரமும் பாடசாலை முகாமைத்துவத்திடம் இருந்தது.

ஆக, எங்களின் அறியாமை காரணமாக எத்தனையோ சைவப் பாடசாலைகளை நாம் அரசாங்கத்திடம் கையளித்துவிட்டு இன்று சைவசமயம் வெறுங்கையோடு நிற்கிறது.

இதை நாம் கூறுவதற்குக் காரணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குரிய பேரவை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் காலாகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்த சமயப் பிரதிநிதித்துவம் இம்முறை வெறுதாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முடிவை அரசாங்கம் எடுப்பதற்குக் காரணம்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சிலர் சமயப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என அரசாங்கத்திடம் கோரிக்கை விட்டதாகத் தெரியவருகிறது.

என்ன செய்வது, சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதன் பிரபு திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஈந்தளித்தார்.

இவ்வாறு சைவசமயம் ஈந்தளித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சமயப் பிரதிநிதித்துவம் தேவையில்லை எனும்போது இதன் விளைவு இந்துபோட் அமைப்புக்கு ஏற்பட்ட கதியாகிவிடுமோ என்ற ஏக்கம் ஏற்படவே செய்கிறது.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பண்பாட்டின் நிலைகளன். இதனைத் தொடர்ந்தும் பேண வேண்டுமாயின் சமயப் பிரதிநிதித்துவ உறுப்புரிமை யாழ்.பல்கலைக் கழகப் பேரவைக்கு அவசியம்.

இதை அனைத்துத் தரப்புகளும் வலியுறுத்த வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் எல்லாமும் அம்போ என்றாகிவிடும்.

## கச்சதீவு பெருந்திருவிழாவுக்கான ஒத்துழைப்பை வழங்குங்கள்

### யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன்

கச்சதீவு பெருந்திருவிழாவுக்கான ஒத்துழைப்பை சகல பக்தர்களும் வழங்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் வேண்டுகோள் விடுத்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

திருவிழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து துறைசார் தரப்பினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே பதில் அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,எங்களால் வழங்கப்படும் படிவத்தை பூர்த்தி செய்து கச்சதீவில் சமர்ப்பிப்பதன் மூலம் தமது பதிவுகளை பக்தர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இதேநேரம் பேருந்து போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்து சேவையில் ஈடுபடும் தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்போக்குவரத்து சேவைக்கான கட்டணங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான ஒரு வழிப்போக்குவரத்துக் கட்டணமாக 1000 ரூபாவும் குறிகட்டுவானிலிருந்து ஒரு வழிப் போக்குவரத்துக் கட்டடணமாக 1300 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பயணம் செய்கின்ற படகுகள் பரிசோதனை செய்யப்பட இருக்கின்றது.

உணவு, தங்குமிட வசதிகள் கடற்படையினர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நெடுந்தீவு பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேச சபை ஆகியவை அந்தப் பணிகளில் பங்களிக்கும். ஆலய சூழல் துப்பரவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குரிய வேலைத்திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இம்முறை விசேடமாக 25 சாரணர்கள் கச்சதீவு ஆலயப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். அந்த வகையில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றார். *(ம-7,33)*

## மகளிர் தின விழா

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் வருடாந்த மகளிர் தின விழாவானது இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் சாவகச்சேரி நகர சபையின் பொன் விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்துப்பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான உரிமைகள் எனும் தொனிப் பொருளில் இடம்பெறும் இந்நிகழ்வில் பெண் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைக் காட்சிக்கூட்டங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் இவ்வளாகத்தில் இன்று, நாளை ஆகிய இரு தினங்களிலும் மகளிருக்கான கண், பல் பரிசோதனைகள், மகப்பேற்று சிகிச்சை தொடர்பான ஆலோசனைகள், தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள், குருதிப்பரிசோதனைகள், சித்த ஆயுள் வேத மருத்துவம் மற்றும் தொழில் வழிகாட்டல் கூட்டுறவுக் கடன் ஆலோசனைகள் போன்ற சேவைகளும் காலை முதல் மாலை வரை வடமாகாண மகளிர் விவகார அமைச்சால் முன்னெடுக்கப்படவுள்ளது. *(ம-7)*

## 2 வயதுக் குழந்தையை சித்திரவதை செய்து கொலை

### தம்பதிக்கு மரண தண்டனை

2 வயதுக் குழந்தையை சித்திரவதைக்குட்படுத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் தம்பதிக்கு மரணதண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று தீர்ப்பளித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, கொழும்பு மாளிகாவத்தைப் பிரதேசத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி தத்தெடுக்கப்பட்ட 2 வயதுடைய குழந்தை ஒன்று சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குழந்தையைத் தத்தெடுத்ததாகக்கூறப்படும் சந்தேக நபர்களான தம்பதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷாங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலும் சந்தேகநபர்களான தம்பதிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டதையடுத்து இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. *(ம-7)*

## உள்ளூராட்சித் தேர்தல்

## சுதந்திரக்கட்சி மன்னாரில் கட்டுப்பணம் செலுத்தியது

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்பில் மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் என்.எம்.எம்.பாரீஸ் தலைமையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய தீப் லொக்கு பண்டார இணைந்து கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை,நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை இவர்கள் செலுத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றமையினால் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையிலே ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மன்னார் மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப் பணத்தை செலுத்தி உள்ளது.

இம்முறை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கூட்டாக இணைந்து போட்டியிடுவதனால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரை சின்னத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

## வவுனியா இரட்டைக் கொலை சந்தேகநபர்களுக்குப் பிணை

*(வவுனியா)*—

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக்கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு விளக்கமறியலை நீடிக்கக் காரணங்கள் போதாமையால் பிணை வழங்கலாம் என வவுனியா மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் யூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் மரணமடைந்திருந்தனர்.

குறித்த இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ.ஆர்.டி சில்வா ஆஜராகி, சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனு சமர்ப்பித்தார்.

அதனை மறுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதிகளால், பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்கள் முன்வைக்கப்பட்டது.

இவை தொடர்பில் கவனம் செலுத்திய மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹால், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பிணை மறுப்புக்கு விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்கக்காரணம் போதாமையால் குறித்த சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கினார். *(ம-7,250)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் மீன்பிடி முறைகளின் பரிணாமம்

## ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கிடையில் பரந்துள்ள யாழ்ப்பாணக் கடல் நீரேரி இலங்கையின் மிகப்பெரிய கடல் நீரேரியாகும். ஆழம் குறைந்த இக்கடல் நீரேரி, அடர்த்தியான கடற்புற்கள், கண்டற் தாவரக்காடுகள், உவர் சேற்று நிலங்கள் மற்றும் சேற்றுத் தரைகள் போன்ற பல்வேறு சூழல் தொகுதிகளைக் கொண்டுள்ளது. இந்த பல்வகைமைச் சூழல், வளமான உயிரின வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்குகிறது. நண்டுகள், கடலட்டைகள், இறால்கள் மற்றும் பல்வேறு வகையான மீன்கள் இனப்பெருக்கம் செய்யவும், முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கவும், இளம் உயிரினங்கள் பாதுகாப்பாக உயிர் வாழவும் இது சிறந்த இடமாக உள்ளது.

யாழ்ப்பாணக் கடல் நீரேரி ஒரு சிறந்த உயிரினப் பல்வகைமை கொண்ட இடமாக ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. குறிப்பாக, 100 வகையான மீன்கள், 15 வகை இறால்கள், 6 வகை நண்டுகள், 28 வகை மொலஸ்காக்கள் மற்றும் 16 வகை கடலட்டைகள் இங்கு காணப்படுகின்றன. இத்தகைய வளமான உயிர்ப்பல்வகைமை, இக்கடல் நீரேரியைச் சுற்றியுள்ள மக்களின் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஏற்ற வாய்ப்புகளை வழங்குகிறது. இது அவர்களின் வாழ்வாதாரத்திற்கும், உள்ளூர் உணவுப் பாதுகாப்பிற்கும் மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

யாழ்ப்பாணக் கடல் நீரேரி, வடமாகாணத்தில் மீன்கள் மற்றும் இறால்களின் உற்பத்திக்கும், கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கும், உள்ளூர் உணவுப் பாதுகாப்பிற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகிறது. வடபகுதி, 1980களில் இலங்கையின் மொத்தக் கடலுணவு உற்பத்தியில் சரிபாதியை வழங்கியுள்ளது. அதில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் மீன்பிடி குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.


யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் இறால் மீன்பிடி முறையானது பல தசாப்தங்களாக பிரதானமான மீன்பிடி முறையாக இருந்து வருகிறது. குறிப்பாக 1980களில் இறால் பிடிக்கும் தொழில் மிகவும் வளர்ச்சியடைந்தது. அப்போது பாரம்பரிய இயந்திரமயமாக்கப்படாத படகுகளைக் கொண்டே மீன்பிடி மேற்கொள்ளப்பட்டது. 1980களில் முக்கியமான இறால் மீன்பிடி முறைகளை கலாநிதி சித்ரவடிவேலு அவர்கள் பதிவு செய்துள்ளார். அவரது ஆராய்ச்சிகளின்படி 10 மீன்பிடி இறங்கு துறைகளிலிருந்து இயங்கும் சிறகு வலைகள், இறால் இழுவை வலைகள், கண்டி வலைகள், ஆரம்ப கால இறால் கூடுகள் மற்றும் கையால் பிடித்தல் போன்ற உத்திகள் இறால் பிடிக்கும் முறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கலாநிதி சித்திரவடிவேலு அவர்கள் 1986 ஆம் ஆண்டு மற்றும் 1987ஆம் ஆண்டுகளில் ஆவணப்படுத்திய பிரதான மீன்பிடி இறங்கு துறைகள் அன்றைய காலகட்டத்தில், யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் சிறகு வலை மீன்பிடி முறை பெருமளவில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இது மற்ற மீன்பிடி முறைகளுடன் ஒப்பிடுகையில், மீன் வளங்களின் நீடித்து நிலைபெறும் தன்மையை மேம்படுத்தும் ஒரு மீன்பிடி உத்தியாகவே அறியப்பட்டது. ஏனெனில், இங்கு பயன்படுத்தப்படும் பெரிய கண்ணளவு கொண்ட வலைகள், சிறிய மீன்கள் மற்றும் இறால்கள் பிடிபடுவதைத் தடுக்கின்றன. பொதுவாக, மீனவர்கள் இந்த வலைகளில் பிடிபடும் சிறிய மீனினங்களை உயிருடன் கடல் நீரேரியில் வெளியேற்றுகின்றனர். இதனால், ஆரோக்கியமான மீன்வளம் பேணப்பட்டது.

மேலும், சிறகு வலை மீன்பிடித் தொழில் அறுவடை, சூரிய உதயத்திற்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் பகலில் இறால்கள் சேற்றில் புதைந்து போகும். அதனால் அவற்றைப் பிடிப்பது கடினம். எனவே இந்த மீன்பிடி முறையானது அதிகாலை வேளையிலேயே மேற்கொள்ளப்பட்டது. அக்காலகட்டத்தில், ஒவ்வொரு மீனவரும் இரண்டு முதல் மூன்று சிறகு வலைத் தொகுதிகளை மட்டுமே பயன்படுத்தினர். இது மீன்பிடி முயற்சியைக் கட்டுப்படுத்தி மீன் வளத்தைப் பாதுகாப்பதற்கு உதவியது.

1980களில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் இறால் இழுவை வலை மீன்பிடி முறை இரண்டாவது பாரிய பயன்பாட்டில் இருந்தது. இந்த இழுவை வலைகள் கடற் புற்கள் மற்றும் கடலின் அடிப் பகுதிகளில் இழுத்துச் செல்லப்பட்டன. இறால் பிடிப்பதில் இது மிகவும் வினைத்திறன் மிக்கதாக இருந்தபோதிலும் மிகச் சிறிய இறால்களும் இதில் பிடிபட்டன. கலாநிதி சித்திரவடிவேலு அவர்கள், இந்த முறையானது கடற்றொழிலின் நீடித்து நிலைபெறும் தன்மைக்கு சவாலாக அமைந்ததாகக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில், 1980களில் இருபது முதல் முப்பது வரையிலான மீனவர்கள் ஆரம்பகால இறால் கூடு வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடித்து வந்தனர்.



இந்த கூண்டு வலைகள், சிறகு வலைகள் மற்றும் இழுவை வலைத் தொகுதிகளால் பிடிக்கப்படும் இறால்களின் இடைப்பட்ட அளவுகளைப் பிடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. மேலும், இந்த கூடு வலைகளில் இறால் பிடிபடும் வீதம் சிறகு வலைகளை விட அதிகமாகவும், இறால் இழுவை வலைகளை விட குறைவாகவும் இருந்ததாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கூடு வலைகள், கடல் நீரேரியின் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டிருந்தன. அவை, இறால்கள் எளிதில் உள்ளே நுழையும் வகையிலும், வெளியேற முடியாத வகையிலும் கட்டப்பட்டிருந்தன. இதன் மூலம், மீனவர்கள் குறிப்பிட்ட அளவிலான இறால்களைத் திறம்படப் பிடிக்க முடிந்தது. அதே காலகட்டத்தில், யாழ்ப்பாணக் கடல் நீரேரிக்கு தனித்துவமான கண்டி வலைத் தொகுதியின் பயன்பாடு, 1980களின் பிற்பகுதியில் வெகுவாகக் குறைந்து வருவதாக கலாநிதி சித்திர வடிவேலு அவர்கள் ஆவணப்படுத்தியுள்ளார்.

1980 இன் பிற்பகுதி முதல் 2009 வரை உள்நாட்டு யுத்தம் தொடர்ந்தமையால் கடற்றொழிலானது பெரும் அச்சுறுத்தலை எதிர் கொண்டிருந்தது. 1995 இன் பிற்பாடு மீள்குடியேற்ற முயற்சிகள் தொடங்கிய போதிலும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உயர் பாதுகாப்பு வலயங்கள் நிறுவப்பட்டிருந்தமையால் தமது வீடுகளுக்கும் இறங்கு துறைகளுக்கும் திரும்ப முடியவில்லை. 1990 முதல் 2000 இன் முற்பகுதி வரை இராணுவத்தின் கடுமையான கட்டுப்பாடுகளால் யாழ்ப்பாணக் கடல் நீரேரிக்குள் கிட்டத்தட்ட கடற்றொழில் முற்றாக மறிக்கப்பட்டிருந்தது எனலாம். இந் நிலைமை 2000ஆம் ஆண்டளவில் தளர்வாக்கப்பட்டபோதிலும் கட்டுப்பாடுகள் கடுமையாக விதிக்கப்பட்டிருந்தன. இரவு கடற்றொழில் தடை செய்யப்பட்டிருந்தது. காலை வேளைகளில் கடற்றொழிலுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இராணுவத்தின் இக்கட்டுப்பாடுகள் இறால் பிடித்தலில் வியத்தகு மாற்றத்திற்கு வழிவகுத்தது. நிலைபேறான கடற்றொழிலுக்கு அச்சாணியாக இருந்த சிறகு வலைத் தொகுதியானது அதிகாலை அறுவடைகளைக் சார்ந்திருந்தமையால் மேற்படி கட்டுப்பாடுகளால் அதனைப் பயன்படுத்தல் குறைந்துவரத் தொடங்கியது. இதனால் படிப்படியாக மீனவர்கள் இறால் கூட்டு வலைகளிற்கு தம்மை மாற்றிக் கொண்டனர்.

2000ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் பயன்படுத்தப்பட்ட இறால் கூட்டு வலைகள், ஆரம்பகால இறால் கூண்டு வலைகளின் வடிவமைப்பு மற்றும் சிறகு வலைகளின் சில கூறுகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டன. இந்த மேம்படுத்தப்பட்ட வடிவமைப்பு, இறால் மீன்பிடித் திறனை அதிகரிப்பதற்கு மீனவர்களுக்கு உதவியது.

கூடு வலைகளின் வடிவமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்கள், அவற்றின் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தின. இந்த வலைகளில் உள்ள கூண்டுகளுக்குள் சிக்கிய மீன்கள் மற்றும் இறால்கள் வெளியேற முடியாத வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. இதனால், அறுவடையை அதிகாலை வேளைகளிலும் மேற்கொள்ள முடிந்தது. மேலும், அறுவடை முறை எளிமையாக இருந்ததால், மீனவர்கள் மூன்றுக்கும் மேற்பட்ட வலைகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். இது, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவியது. கூடு வலைகளின் இந்த மேம்படுத்தப்பட்ட வடிவமைப்பு, யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் இறால் மீன்பிடித்தொழிலை மேம்படுத்தியதுடன், மீனவர்களின் பொருளாதார நிலையையும் உயர்த்தியது.

இறால் கூட்டு வலைகள் மீன்பிடித்தினை அதிகரித்த போதிலும், நீடித்து நிலைத்திருக்கும் மீன் வளத்திற்கு அவை சவாலாகவே அமைந்தன என்பதை மீனவர்கள் நன்கு அறிந்திருந்தனர். குறிப்பாக, வலைகளின் சிறிய கண்ணளவு காரணமாக, இளம் மீன்கள் மற்றும் நண்டுகள் பிடிபட்டன. இது, இனப்பெருக்கத்தைப் பாதித்து, மீன்வளத்தை கணிசமாகக் குறைக்கும் என மீனவர்கள் அறிந்திருந்தனர். எனினும், அக்காலகட்டத்தில் நிலவிய பொருளாதார சூழ்நிலை மற்றும் சிறகு வலைகளைப் பயன்படுத்துவதில் இருந்த சிக்கல்கள் காரணமாக, அவர்கள் கூட்டு வலைகளைப் பயன்படுத்தினர்.

2009 இல் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததுடன் கடற்றொழிலில் இருந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. ஆயினும் மிகச்சில மீனவர்களே மீண்டும் சிறகுவலை தொகுதியை பயன்படுத்தத் தலைப்பட்டனர். இலாபம் மற்றும் இலகுவான தன்மைக்குப் பழக்கப்பட்டதால் பலர் இறால் கூட்டு வலைகளையே தொடர்ந்தனர்.

இடம்பெயர்ந்த மக்களை குறிப்பாக மீனவர்களை மீள்குடியேற்றுவதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அரச மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகள் கடல் நீரேரியினுள் கடற்றொழிலின் விரிவாக்கத்தில் கணிசமாக பங்களிப்புச் செய்தது. யுத்தத்தால் வாழ்வாதாரம் இழந்த பலர், அரச மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவிகளுடன் யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர். இறால் கூண்டு வலை முறை, எளிமையானதாகவும் அதிக வருமானம் தரக்கூடியதாகவும் இருந்ததால், அதுவே அவர்களின் பிரதான மீன்பிடி முறையாக மாறியது.

மீன்வள முகாமைத்துவத்தில், MSY (Maximum Sustainable Yield: அதிகபட்ச நிலையான உற்பத்தி) என்பது ஒரு மீன் இனத்தை, அதன் இனப்பெருக்க திறனை பாதிக்காமல், நீண்ட காலத்திற்கு அதிகபட்சமாக எவ்வளவு பிடிக்கலாம் என்பதைக் குறிக்கிறது. Fmsy என்பது MSYஐ அடையத் தேவையான மீன்பிடி முயற்சியின் அளவைக் குறிக்கிறது. அதாவது, குறிப்பிட்ட வலைகள், படகுகள் மற்றும் மீன்பிடி நேரத்தைப் பயன்படுத்தி, MSY-ஐ அடைய எவ்வளவு மீன்களைப் பிடிக்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது.

யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில், வாழ்வாதாரத் தேவைகள் மற்றும் அரசு வழங்கிய வாழ்வாதாரத் திட்டங்களின் விளைவாக, யாழ்ப்பாணக் கடல் நீரரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. 1980களில் 600 ஆக இருந்த மீனவர்களின் எண்ணிக்கை தற்போது 5000-ஐத் தாண்டியுள்ளது. இதன் காரணமாக, யாழ்ப்பாணக் கடனீரேரியின் தற்போதைய சூழலில், மீன்பிடி முயற்சி அதிகபட்ச நிலையான உற்பத்தித் திறனான Fmsy-ஐ தாண்டிச் சென்றதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். மீனவர்கள் தங்கள் மீன்பிடி அளவு குறைவதாகக் கூறுவது, யாழ்ப்பாணக் கடனீரேரி Fmsy-ஐ தாண்டியதையே உறுதிப்படுத்துகிறது.

இந்த நிலை தொடர்ந்தால், கடல் நீரேரியிலும் கடலிலும் மீன் மற்றும் இறால் உற்பத்தி படிப்படியாகக் குறைந்து மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே கடல் நீரேரி மீன்பிடியை முறைப்படுத்துவது இன்றியமையாதது. நீரியல் வளத் திணைக்களம் புதிய வலைகளை கடல் நீரேரியில் அமைப்பதை நிறுத்தியுள்ளது. இருப்பினும், கடற்றொழிலாளர் சட்டங்கள் சமூக அமைப்பில் வரையறுக்கப்பட்டிருந்தாலும், அவை நடைமுறையில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. கடற்றொழில் சங்கங்கள், ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்தி, இறால் கூண்டு வலைகளின் பயன்பாட்டைக் குறைத்து, சிறகு வலை முறைகளை அதிகரிப்பதன் மூலம் மீன் வளத்தைப் பாதுகாத்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

ராகவன் நடராஜா
விரிவுரையாளர்,
மீன்பிடியியல் விஞ்ஞான துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபோகத்துக்கு...

அவசியமான உர விநியோகம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரம் தொடர்பான கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

தடையின்றி விவசாயிகளுக்கு சிறுபோக பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## தருமபுரத்தில்...

வேல் (வயது-50) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீடொன்றின் பின்புறத்தில் கைவிடப்பட்ட பகுதியில் குறித்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## 160 சிகரெட்...

நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பேருந்து நிலையத்தில் இளைஞன் ஒருவர் ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுடன் உலாவித் திரிவதாக அச்சுவேலிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த இளைஞனைக் கைது செய்தனர்.

அதன்போது இளைஞனிடம் இருந்த பையிலிருந்து 160 வெளிநாட்டு சிகரெட் பெட்டிகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அவற்றின் பெறுமதி சுமார் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

## குரங்கை...

இடம்பெற்றுள்ளது.

மல்லாவி பாரதி நகர்ப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியானதையடுத்து பலர் இதற்குக் கண்டனங்கள் வெளியிட்டு வருகின்றனர். (ம-7)

## தையிட்டி...

மாக அமைக்கப்பட்டிருக்குமாயின் அதற்காக அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

மேலும் தையிட்டியில் தங்களின் காணியைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்து வரும் காணி உரிமையாளர்களுக்கு அரசு முன்வைக்கும் தீர்வு தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வினவினார்.

இதற்குப் பதிலளித்த புத்தசாசன, அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, தையிடிட்டி விவகாரம் தொடர்பில் காணி அமைச்சு உள்ளிட்ட பல நிறுவனங்களிடமிருந்து தகவல் சேகரிக்கப்பட வேண்டியுள்ளதனால் தமக்குக் கால அவகாசம் வழங்குமாறு கோரினார். (ம-7)

## யுத்தத்தில்...

அல் ஜசீராவுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

2009ம் ஆண்டு முடிவிற்கு வந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி வழங்கப்பட்டுவிட்டதா? எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க எந்த சமூகத்திற்கும் இதுவரை நீதி வழங்கப்படவில்லை.

யுத்தத்தில் சிக்குண்டு இருந்தவர்களிற்கான மனிதாபிமான உதவி தடுக்கப்பட்டது, மருத்துவமனைகள் மீது குண்டுவீச்சு இடம்பெற்றது.

ஆனால் இது திட்டமிடப்பட்ட விதத்தில் முன்னெடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

விமானப்படை விமானங்கள் மருத்துவமனைகள் மீது குண்டுவீசிய தருணங்கள் உள்ளன. இதற்காக அவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால் அது பெருமளவில் இடம்பெறவில்லை என்றார். (ம-7)

## யாழில் காற்று...

மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் நீதிபதி முகமது லபார் தாஹிர் மற்றும் நீதிபதி சரத் திஸாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காற்றின் தரம் குறித்து ஒரு மாத காலத்திற்கு ஆய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவின்படி, தொடர்புடைய கணக்கெடுப்பு அறிக்கை சட்டமா அதிபர் மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆய்வறிக்கையை ஆய்வு செய்த போது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள காற்றில் நிலையான அளவைவிட அதிகமான தீங்கு விளைவிக்கும் கூறுகள் இருப்பதாகத் தகவல் தெரியவந்துள்ளதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே, நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கான ஒரு திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகப் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

இதற்காக பெரும் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்றும் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து நிதியைப் பெறத் திட்டமிட்டுள்ளதாகவும் அரசாங்கத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார். (ம-7)

## வழமைக்கு...

திரும்பியதாக அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சத்தியசீலன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை தவிர்ந்த அனைத்து நாட்களும் இந்தக் கப்பல் சேவையானது இடம்பெற்று வருகின்றது.

எனவே பயணிகள் www.Sailsubham.com என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலமாகவோ அல்லது 0212224647, 0117642117 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனக் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2025.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 5767
F 1 6 3 1 4 2
அத சம்பத F 3 1 4 2
சீட்டிழுப்பு இலக்கம் 0342

தன நிதானய
திகதி - 2025.03.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1797
J 27 55 61 71 J
66807

மெகா பவர்
திகதி 06/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2115
K 20 07 10 28 55

ஜய JAYA
திகதி 2025.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 035
N 4 9 7 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4009
சீட்டிழுப்பு திகதி 06.03.2025
Q 10 12 51 72
Q

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 1076
கும்பம் 01 02 31 35 கும்பம்
41303 20

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.03.2025 வெற்றி வாரம் 475
R 7 2 4 0 0 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32.969.424.80
75862

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2741
சீட்டிழுப்பு திகதி 2025.03.06 தினம் வியாழக்கிழமை
14 76 77 80 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,477,786.40

சனிதா
திகதி 06.03.2025 வெற்றி வாரம் 4902
38 45 64 75 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,875,121.20
63433

சசிரி
636
06.03.2025
வியாழக்கிழமை
04 29 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4453
சீட்டிழுப்பு திகதி 06.03.2025 தினம் வியாழக்கிழமை
10 46 60 62 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.16,875,308.80
239116

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 31 19 24 42 71
1917
06.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,579,646.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2567
சீட்டிழுப்பு திகதி :2025.03.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,410,776.00
04 06 17 31 P
262160


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரித்து...

கூட்டத்தின் போதே இந்த விடயம் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, யாழில் அதிகரித்து வரும் வெள்ளை ஈயின் தாக்கம் தென்னைகளை அதிகளவில் பாதிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மருந்துகளை விசிறி அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தென்னை பயிர்ச் செய்கை சபை தெரிவித்திருந்தது.

மேலும், வீதிகளை அமைக்கும் போது கமநல சேவைகள் விவசாய குழுக்களின் கருத்துக்களை கேட்டு அவற்றை செய்ய வேண்டும் என்ற விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளும் எட்டப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது.

யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பிரதேச செயலர்கள், திணைகள அதிகாரிகள், விவசாய பணிப்பாளர்கள், மாவட்ட விவசாய திணைக்களத்தினர், துறை சார்ந்தவர்கள், கமநல சேவை பிரிவினை சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(ம-7,33)

## கல்வி...

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், கல்வித் துறையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பாக செயல்படுத்த வேண்டிய புதிய சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை பாடசாலைக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது.(ம-7)

## யாழ். மத்திய கல்லூரி அதிபராக செல்வகுணாளன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக திருமதி சி.எஸ்.ஆர். செல்வகுணாளன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

(ம-7)


2024 (2025) O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு — ஆசிரியர் RS. சந்திரன்

காலம்: மார்ச் 08,09 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள்:
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

(3575)

றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134 நிர்வாகம்



Village Hotel Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு:
www.villagehotel.lk
077 544 8503
(3456)



நெல்லியடி யாழ்ப்பாண வீதியில்
உடனடியாக கடை வாடகைக்கு விடப்படும்
கீழ்க் கடை : முதலாம் மாடி உட்பட
Hand Phone : 076 089 3660
Land Phone : 021 226 4289
பிரதேச சபை கடை இல : 122
(C-2397)



நம்பினால் நம்புங்கள்
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
076 008 6961, 077 844 9861
(3591)



UK BUSINESS VISITOR VISA
லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET வர்த்தக கண்காட்சியில்..
விசா விண்ணப்பங்கள் / STALL BOOKING / HOTEL BOOKING / RETURN AIR TICKET
தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777
(C-2400)




காணி விற்பனைக்கு
நீர்வேலிச் சந்தியில்
அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
074 38 25 961
076 91 97 566
077 46 87 645
(3583)



கனடாவில் PR வாய்ப்புக்கள்
CARE GIVER கற்கைநெறி
HOME SUPPORT WORKER & HOME CHILD CARE PROVIDER
NVQ/UK DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்
CIMS 49A, CHAPPEL LANE JAFFNA 0777068777
(C-2400)



26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.01.1922
ஸ்ரீமான்
மறைவு 23.02.1999
சின்னையா நல்லையா
(6ஆம் வட்டாரம், மண்டைதீவு)
ஐயா! என்றும் உங்கள் நினைவுடன்.
உங்கள் ஆத்மா திருவெண்காட்டுப் பெருமானின் திருவடிகளில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.
இல. 21/3 A, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.
குடும்பத்தினர்



WESTERN UNION MONEY TRANSFER · MoneyGram · DHL · Dialog · Money Master · Ria · aramex
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள், சேவை. Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமான சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.
ஸ்ரீமுருகன் SRI MURUGAN
No.303, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 2670 / 5392
(C-2398)



காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் யாழ். நகர் பகுதி வெலிங்டன் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி செல்லும் பொன்னம்பலம் பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் சகல ஆவணங்களுடன் இரண்டு பரப்பு மூன்று குளி காணி விற்பனைக்கு உண்டு.
வீடுகள் அமைப்பதற்கும் ஏற்ற இடம்.
- யாழ். போதனா வைத்தியசாலை 100 மீற்றர்.
- கீல்ஸ் புட்சிற்றி 50 மீற்றர்.
- ஸ்ரான்லி றோட் வெலிங்டன் சந்தி 50 மீற்றர்
- 200 மீற்றர் யாழ். பஸ் நிலையம்.
- தரகர் தேவையில்லை.
076 755 8606, 077 638 5683
(3594)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினால் இல.181, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.